# ஆலவயல் கத்தரிக்காய்



புதுக்கோட்டை மாவட்டம், மலையாண்ட்புரம், நடேசன்…'ஆலவயல்' என்ற பெயரில் அழைக்கப்படும் நாட்டுக் கத்தரிக்காயைத் தொடர்ந்து தன்னுடைய வயலில் சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்.

சின்னப் பிள்ளையில் இருந்தே விவசாயம்தான். எங்க அப்பாவோட சோர்ந்து வயலில் இறங்கி விவசாயத்தைக் கத்துக்கிட்டேன். இப்போ, எனக்கு சொந்தமா ரெண்டு கிணறோட நாலரை ஏக்கர் நிலமிருக்கு. மணல் கலந்த கரிசல் மண்தான். அதில. மா, பலாவும் ஒரு சிறிது நிலத்தில் மீதியில் செண்டுமல்லி, மல்லிகை, நெல், கடலை காய்கறினு மாத்தி மாத்தி சாகுபடி செய்துகொண்டிருக்கிறேன். ஆரம்பத்தில் நானும் ரசாயன விவசாயம் தான் செய்து கொண்டிருக்கிறேன். பின் இயற்கை விவசாயத்துக்கு மாறிட்டேன். ஆலவயல் கத்தரிக்காய் சாதாரணமாகவே நல்ல ருசியோடு இருக்கும். நான் இயற்கை முறையில விவசாயம் பண்றதால கூடுதல் ருசி கிடைக்குது. அதுவே கூடுதல் விலையையும் கொண்டு வருகிறது. உழவர் சந்தையில் தான் கத்தரியை வித்துக்கிட்டு இருக்கேன். மத்தக் கத்தரிக் காய்களைவிட இதுக்கு கூடுதலாக அஞ்சு ரூபாய் விலை வைத்துத் தருகிறார்கள்.

ஆலவயல் கத்தரியை வருடம் முழுவதும் சாகுபடி செய்யலாம். குறிப்பாக ஆடிப் பட்டத்தில் செய்யும் போது விளைச்சலும் நன்றாக இருக்கும். நல்ல விலையும் கிடைக்கும். களிமண் தவிர, மற்ற எல்லா வகையான மண்ணிலும் வரும். விதைப்பதைவிட நாற்று நடவு செய்யும் போது பயிர் நன்றாக வரும். நன்றாக முற்றிப் பழுத்த காய்களில் இருந்து விதைகளைச் சேகரித்துக் கொள்ள வேண்டும். 40 சென்ட் நிலத்துக்கு நாற்று தயாரிக்க, அரைசென்ட் நிலத்தைக் கொத்திக் களை நீக்கி, இரண்டு கூடை எருவைக் கொட்டிக் கிளறி சமப்படுத்த வேண்டும். கால் கிலோ கத்தரி விதையைத் தூவி, மண்ணால் மூடி அதன் மேல் வாழைச் சருகு அல்லது தென்னை மட்டையால்

மூடிவிட வேண்டும். தினம் பூவாளியால் தண்ணீர் தெளித்து வந்தால் போதும். 10ம் நாள் 300 மில்லி பஞ்சகாவ்யாவை 1 டேங்க் (16 லிட்டர்) தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். 30ம் நாளில் நாற்று தயாராகி விடும். அதற்கு முன்னரே நிலத்தைத் தயார் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். ஏர் மூலமாக குறுக்கு நெடுக்காக ஐந்து சால் உழவு செய்ய வேண்டும். டிராக்டர் என்றால், இரண்டு சால் உழவு போதுமானது. பின் ஒன்றரை அடி அகலத்தில் நீள நீளமாக பார் பிடிக்க வேண்டும். பாருக்கு குறுக்காக பத்தடிக்கு ஒரு வாய்க்கால் இருப்பது போல் அமைத்துக் கொள்ள வேண்டும். நாற்று தயாரான உடன் நிலத்தில் தண்ணீர் கட்டி, பாரின் ஒரு பக்கத்தில் ஒன்றரை அடிக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். 40 சென்டில் 2,500 செடிகள் வரை நடலாம். செடி காயாத அளவுக்கு தொடாந்து வாரம் ஒரு தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

600 கிலோ மண்புழு உரம், 20 கிலோ வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். இந்த உரத்தை, 15-ம் நாளில் முதல் களை எடுத்ததும், ஒவ்வொரு செடியின் தூருக்கு அருவிலும் நான்கு விரல் அளவு இடைவெளியில் ஒரு கையளவு வைக்க வேண்டும். பின் பாரைக் கலைத்து, கத்தரிச் செடி மையமாக இருப்பது போல மண்ணை அணைத்துவிட வேண்டும். 25-ம் நாளில் இருந்து 15 நாட்களுக்கு ஒரு முறை டேங்கருக்கு (16 லிட்டர்)300 மில்லி பஞசகாவ்யா கலந்து தொடர்ந்து (அறுவடை முடியும் வரை) தெளித்து வர வேண்டும். 30, 45 மற்றும் 60-ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். 55-ம் நாள் மீண்டும் ஒரு முறை 200 கிலோ மண்புழு உரம் 20 கிலோ வேப்பம் பிண்ணாக்கைக் கலந்து தூருக்குத் தூர் ஒரு கையளவு வைத்து வைத்து தண்ணீர் கட்ட வேண்டும்.

நான்கு நாளைக்கு ஒரு பறிப்புனு தொடர்ந்து எட்ட மாசம் வரை காய் பறிக்கலாம். மேட்டுப்பகுதியாக இருந்தால், ஒரு வருஷத்துக்குப் பிறகும் கூட காய் கறிச்சுக்கிட்டே இருக்கலாம். ஆனா, ஏதும் நோய் வராட இருக்கணும். ஒரு பறிப்புக்கு 70 முதல் 80 கிலோ வரை காய் கிடைக்கும். ஓரு கிலோ 15 ரூபாயில் இருந்து 20 ரூபாய் வரைக்கும் இப்ப விற்பளையாகுது.

நான் இது வரைக்கும் 35 தடவை காய் பறிச்சிருக்கேன். இதுவரை 2,450 கிலோ கிடைத்திருக்கிறது. அது மூலமா 40 ஆயிரம் ரூபாய்க்கு மேல வருமானம் கிடைத்திருக்கிறது. என்னோட நிலம் மேட்டுப்பகுதியத இருக்கிறதால இன்னும் நாப்பகு தடவைக்கு காய் பறிக்க முடியும். அதுல இன்னும் 2,800 கிலோவுக்கு மேல் கிடைக்கும்னு எதிர்பார்க்கிறேன்" என்றார் உற்சாகத்துடன்.